- 069

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2007 / 2008

## HELD IN AUGUST – 2008

## BBA 26 – MANAGERIAL ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) இலங்கையிலுள்ள பின்வரும் ஏதாவதொரு நிறுவனம் ஒன்றில் நீர் நிர்மானம் மேற்கொள்ளும் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளீர் எனக் கருதிக் கொள்க. அந்நிறுவனத்தின் தீர்மானம் மேற்கொள்ளலில் எவ்வாறு பொருளியல் அடிப்படை எண்ணக்கருக்களை பயன்படுத்துவீர்.

ABC ஆடைத் தொழிற்சாலை - கொழும்பு

அப்பலோ தனியார் வைத்தியசாலை - கொழும்பு

டோக்கியோ சீமெந்து கம்பனி லங்கா லிமிற்றட்

யுனிலெவர் இலங்கை நிறுவனம்.

(12 புள்ளிகள்)

(ஆ) 'விலையிடல்' என்பதால் கருதப்படுவது யாது?
விலையிடலின் நோக்கங்களை சுருக்கமாகத் தருக.

(04 புள்ளிகள்)

(இ)

| நிறுவனம் | உற்பத்தி |
|---|---|
| X | படத்தயாரிப்பு |
| Y | மோட்டார் வாகனம் |
| Z | உரப்பசளை |

X, Y, Z ஆகிய நிறுவனங்கள் என்ன வகையான விலையிடல் முறைகளைப் பின்பற்ற முடியும் என்பதனை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

02. (அ) கேள்வி எதிர்வுகூறலின் முக்கியத்துவத்தினையும், எதிர்வு கூறலுக்குத் தேவையான விடயங்களையும் இன்றைய வியாபார நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

(ஆ) எதிர்வுகூறல் முறைகளை வரைபட ரீதியாக விளக்குக.

(02 புள்ளிகள்)

(இ) உமக்கு பின்வரும் கேள்வித் தொழிற்பாடு தரப்பட்டுள்ளது.

$$Q_X = 5074 - 4000P_X + 1500P_Y + 300A_X - 32A_Y + 0.2Y_X$$

இங்கு $Q_X$ = பொருள் X இனது கேள்வித் தொகை

$P_X$ = பொருள் X இனது விலை

$P_Y$ = தொடர்பான பொருளின் விலை

$A_X$ = உற்பத்திப் பொருளுக்கான விளம்பரம்

$A_Y$ = தொடர்பான பொருளுக்கான விளம்பரம்

$Y_X$ = நுகர்வோனின் வருமானம்

பின்வரும் மாறிகளுடைய பெறுமதிகளைக் கருத்திற் கொண்டு பொருள் X இனது விற்பனை மட்டத்தினை எதிர்வு கூறுக.

$P_X$ = ரூபா.8, $P_Y$ = ரூபா.6, $A_X$ = ரூபா.168, $A_Y$ = ரூபா.182 , $Y_X$ = ரூபா.26, 000

(05 புள்ளிகள்)

(ஈ) ABC நிறுவனமானது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் போட்டோ கொப்பி இயந்திரத்திற்கான toners களினை எதிர்வுகூற தீர்மானித்துள்ளது. இதன் கடந்த 5 வருடகால தரவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| வருடம் | Toner (அலகுகள்) |
|---|---|
| 2003 | 240 |
| 2004 | 260 |
| 2005 | 300 |
| 2006 | 280 |
| 2007 | 320 |

2008, 2010, 2012, 2013, 2014 ம் ஆண்டுகளுக்கு தேவைப்படுகின்ற toner களின் அளவினை எதிர்வு கூறுக.

(10 புள்ளிகள்)

03. (அ) சமபயன் வளையியினது பண்புகள் யாவை?

(04 புள்ளிகள்)

(ஆ) X, Y என்ற இரு பொருட்களை ஒரு நுகர்வோன் நுகர்கின்றான் எனக் கருதிக்கொள்க. அவனுடைய பயன் சார்பின் வடிவமானது பின்வருமாறு அமையும்

$$U(x,y) = X^{0.2}\, Y^{0.6}$$

வரவு செலவுத்திட்ட வரையறை: M = Px. X + Py. Y

இங்கு,

Px = X பொருளின் விலை

Py = Y பொருளின் விலை

M = வருமானம்

X, Y பொருட்களைத் தெரிவு செய்வதன் மூலமாக பயனானது உச்சப்படுத்தப்படுகின்றது.

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

i) X இற்கான மார்சலினது கேள்வி சார்பினைப் பெறுக.

ii) Y இற்கான மார்சலினது கேள்வி சார்பினைப் பெறுக.

(Lagrangian Multiplier Technique இனைப் பயன்படுத்துக.)

(10 புள்ளிகள்)

iii) மேலே பெறப்பட்ட கேள்விச் சார்பினைப் பயன்படுத்தி X, Y பொருட்களின் விலைகள் முறையே ரூபா. 100/-, 50/- எனவும் நுகர்வோனின் செலவிடத்தக்க வருமானம் ரூபா. 5000/- எனக் கருதிக் கொண்டு நுகர்வோனின் X, Y இற்கான உத்தம கொள்வனவுச் சேர்க்கையைக் காண்க.

(06 புள்ளிகள்)

04. (அ) பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்க.

* பூச்சிய மூலதன அசைவு (Zero capital mobility)
* அசைவுள்ள மூலதனம் (Some capital mobility)
* பூரண மூலதன அசைவு (Perfect capital mobility)
* MR- நிலையான நாணய மாற்று வீதம் (Fixed exchange rate with sterilized intervention)
* GR- நிலையான நாணயமாற்று வீதம் (Fixed exchange rate without sterilized intervention)
* FR- நெகிழும் அல்லது மிதக்கும் நாணயமாற்று வீதம் (Floating exchange rate)

பல்வேறுபட்ட மூலதன நகர்வினையும், பல்வேறுபட்ட நாணயமாற்று வீதங்களையும் பயன்படுத்தி இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரங்களில் நாணய நடைமுறைக் கொள்கையின் கீழான சார்பு ரீதியான செயற்றிறன்களை மதிப்பிடுக. மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு எவ்வகையான நாணயமாற்று வீத முறை பொருத்தமானது என்பதனை எடுத்துக் காட்டுக.

(15 புள்ளிகள்)

(ஆ) வெளிநாட்டு நேரடி முதலீட்டினை வரைவிலக்கணப்படுத்தி, இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான வாய்ப்புக்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

05. (அ) உற்பத்தி தொழிற்பாட்டின் வகைகள் யாவை?

(02 புள்ளிகள்)

(ஆ) கொப்-டக்ளஸ் உற்பத்திச் சார்பின் சிறப்பம்சங்களையும், குறைபாடுகளையும் சுருக்கமாக விளக்குக.

(02 புள்ளிகள்)

(இ) பின்வரும் கொப்-டக்ளஸ் உற்பத்திச் சார்பினைக் கருத்திற் கொள்க.

$$Q = AX^{\beta 0} \; Y^{\beta 1}$$

பின்வருவனவற்றைக் காண்க.

i) உற்பத்திக் காரணிகளின் சராசரி உற்பத்தி
ii) உற்பத்திக் காரணிகளின் எல்லை உற்பத்தி
iii) உற்பத்திக் காரணிகளின் நெகிழ்ச்சி
iv) காரணிகளின் எல்லை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம்

(04 புள்ளிகள்)

ஈ) இரண்டு உற்பத்திக் காரணிகளைப் பாவித்து ஒரு நிறுவனமானது உற்பத்தியை மேற்கொள்கிறது. அதனது உற்பத்திச் சார்பானது பின்வருமாறு:

$$Q = 1000 \; F_1^{0.75} \quad F_2^{0.25}$$

வரையறைச் சார்பு: $C = P_1 F_1 + P_2 F_2$

இங்கு,

$F_1$, $F_2$ } உற்பத்திக் காரணிகள்

$P_1$, $P_2$ } உற்பத்திக் காரணிகளின் விலை

i) $F_1$ , $F_2$ காரணிகளின் கேள்விச் சார்பினைக் காண்க.

(03 புள்ளிகள்)

ii) P1 = 100/- எனவும் P2 = 200/- எனவும் மொத்த உற்பத்திக்கான செலவு 20,000/- எனவும் கொண்டு F1 , F2 காரணிகளின் அளவினையும், உத்தம வெளியீட்டு மட்டத்தினையும் காண்க.

(03 புள்ளிகள்)

iii) இப்பொழுது உற்பத்திக் காரணியின் விலைகள்:

P1 = 75/-

P 2 = 150/-

ஆகவும், உற்பத்திக்கான செலவில் மாற்றம் இல்லை எனவும் கருதிக் கொண்டு F1 , F2 காரணிகளின் அளவினையும், உத்தம வெளியீட்டு மட்டத்தினையும் காண்க.

(03 புள்ளிகள்)

iv) வினா (iii) இல் பெறப்பட்ட விடைகளை பாவித்து இந்நிறுவனம் சந்தைச் சூழலில் நிலைத்து இருக்குமா? இல்லையா? என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

*****